# நெட் பேங்கிங் சேவையில் நிதிபாதுகாப்பு அவசியம்

துபாய் : ஐரோப்பிய, ஆப்பிக்க கீழை நாடுகள் நிதியம் சார்பில் சிறந்த கீழைநாடுகளின் வங்கி2017 விருது வழங்கும் விழா துபாயில் நடந்தது. நிதித்துறை சேவையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் பலவும் பங்கேற்ற இந்த விழாவில் தோகா வங்கி சிஇஓ சீதாராமன் பேசியதாவது:

வங்கி வர்த்தக நடைமுறையை சீரமைக்கும்போது வளர்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு, சமூக மற்றும் நிறுவன எதிர்பார்ப்பு ஆகியவற்றை ஈடு செய்ய வேண்டியுள்ளது.

முடுக்கப்பட்ட மின்னணு பரிவர்த்தனை, நிதித்துறையை ரொக்கமில்லா பரிவர்த்தனைக்கு கொண்டு செல்லும். இணைய வங்கி நடைமுறையில் வாடிக்கையாளரின் வசதியுடன், அவர்களது நிதிப் பாதுகாப்புக்கு வங்கிகளும், நிதிக்கொள்கை வகுக்கும் அமைப்புகளும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இணைய வங்கி (நெட் பேங்கிங்) சிக்கல்களுக்கு தீர்வு காணவேண்டும். வாடிக்கையாளரைப் பாதுகாக்கவும், இணைய குற்றவாளிகள் ஊடுருவல் முறியடிக்கப்படுவதையும் வங்கிகள் உறுதிப்படுத்த வேண்டும். தோகா வங்கி தனது பசுமை வங்கி நடைமுறையுடன், சுற்றுச்சூழல் பள்ளிகள் திட்டத்தை உருவாக்கி, ஒவ்வொரு பள்ளி மாணவர்கள் மத்தியிலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உருவாக்கி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.



தோகா வங்கி சிஇஓ சீதாராமனுக்கு விருது வழங்கப்பட்டது.